Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை -28 11-02-2004 புதன்கிழமை ஓசை-358

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத்
தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-9206)
123,பஜார் வீதி, வவுனியா.

## தென்பகுதி அரசியல் நெருக்கடியைப் பாராது வடகிழக்கிற்கு ஹொலண்ட் உதவவேண்டும்

### -ஹொலண்ட் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளிடம் புலிகள் வேண்டுகோள்

இலங்கையின் தென்பகுதி அரசியல் இழுபறிக்கான தீர்வு ஏற்படும் வரை பொறுத்திராது வடக்கு கிழக்கு மக்களுக்கான அவசர மனிதாபிமான பணிகளுக்கு ஹொலண்ட் அரசாங்கம் உதவ வேண்டும் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஹொலண்ட் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று ஹொலண்ட் வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்தில் அமைச்சக உயர் அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஜேர்மன் ஸ்கெபர் (அரசியல் விவகாரங்களுக்கான பிரதிப்பணிப்பாளர் நாயகம்) றொபேட் மைல்டேர்ஸ்- (ஆசிய பிராந்திய திணைக்களப்பணிப்பாளர்)ஆகியோர் ஹொலண்ட் வெளியுறவுத் துறை அமைச்சு சார்பில் கலந்துகொண்டனர்.

கொழும்பிலுள்ள ஹொலண்ட் தூதரகம் ஊடாக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான முன்முயற்சிகளை எடுக்கவுள்ளோம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் பங்கேற்கும் உத்திபற்றி த.கூட்டமைப்பு நேற்று ஆராய்வு

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பங்கேற்கும் உத்திபற்றி தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் கூடி ஆராய்ந்தனர்.

கட்சிகளுக்கிடையில் தொகுதி உடன்பாடு குறித்தும், விருப்பு வாக்கு இல்லாமல் கட்சிக்கு மட்டும் வாக்களிப்பது பற்றியும் மற்றும் ஏனைய கட்சிகளுடனான தேர்தல் கூட்டுபற்றியும் விவாதிக்கப்பட்டது. முடிவு எதுவும் எட்டப்படவில்லை தொடர்ந்து இன்றும் கூட்டம் நடைபெறும். இதேவேளை ம.ம.முன்னணித் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் தமிழ்க்கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சந்தித்து வடக்கு கிழக்கு தவிர ஏனைய பகுதிகளிலுள்ள சக்திகளையும் திரட்டுவது பற்றி நேற்று விவாதித்துள்ளார்.

இதுதொடர்பாக அவரது கட்சியுடன் உடன்பாடு ஏற்படும் என்று த.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் முடிவுகள் சமாதானத்திற்கு பாதகமாக அமைந்துவிடக் கூடாது

### சிறிலங்காவிற்கான அமெ. தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

**தேர்தல் பிரச்சாரங்களோ அல்லது தேர்தல் முடிவுகளோ இலங்கையின் சமாதானத்திற்குப் பாதகமாக அமைந்துவிடக் கூடாதென்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகுமென அமெரிக்கா அறிவித்துள்ளது.**

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின்பேச்சாளர் இது தொடர்பாகசெய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தேர்தலில் இலங்கை மக்கள் தெரிவு செய்யும் எந்தவொரு அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட எமது நாடு தயாராயுள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயபூர்வமாகவும் வன்முறை அற்றமுறையிலும் நடைபெற வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பமாகும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் நடைபெறும் தேர்தலின் மூலம் இலங்கையிலுள்ள கட்சிகள் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை, தேர்தல் முடிவுற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிளை மறித்த இடத்தில் நிறுத்தாததால் இரு இளைஞர் மீது படையினர் தாக்குதல்

### -காயங்களுடன் இளைஞர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(வடமராட்சி)

சாவகச்சேரி நகரப்பகுதியில் வைத்து படையினரால் தாக்கி காயம் விளைவிக்கப்பட்ட இளைஞர்கள் இருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 8.00 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற இவ் அசம்பாவிதத்தின் போது மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தவர்களான அ.பார்த்தீபன் (வயது 22) மற்றும் ந.குட்டி

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை முன்னெடுக்கக் கூடிய சக்திகளுக்கு வாக்களியுங்கள்

### -தென்னிலங்கை மக்களுக்கு கருணா கோரிக்கை

(மட்டக்களப்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சக்திகளுக்கு தென்னிலங்கை மக்கள் வாக்களிப்பதன் மூலம் சமாதான நடவடிக்கைகளை தொடரச் செய்ய வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தென்னிலங்கைமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரைச் சந்தித்தபின்னர் கரடியனாறு தேனகம் விடுதியில் உள்ளூர் செய்தியாளர்களுடனான சந்திப்பில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக செய்தியாளர் கேட்டபோதே அவர் இந்த வேண்டுகோளை

(8ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் மட்டு., திருமலைக்கு விஜயம்

### -கருணாவைச் சந்தித்துப்பேச்சு

போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத் தலைவரான மேஜர் ஜெனரல் டொன்புறூவ்ஹோவ்டே நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்திற்கும், நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் விஜயம் செய்தார்.

மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளை தனித்தனியாக சந்தித்து உரையாடிய அவர் நேற்றுப்பிற்பகல் கரடியனாறு தேனகம்விடுதியில் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் கூட்டணி வெற்றிபெறின் சமாதானத்தை அதுமுன்னெடுக்காது

### -பா.உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி

(லண்டன்)

தேர்தலில் சனாதிபதி சந்திரிகாவின் புதிய கூட்டணி வெற்றி பெற்றால் சமாதான முயற்சிகளை இக்கூட்டணி முன்னெடுத்துச் செல்லும் என்றுநான் நம்பவில்லை என அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புதிதாக சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட அமைச்சரான ஜெயரட்ண, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்குஅதிகாரங்கள் வழங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முதலாவது தேர்தல் வன்முறை

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் முதலாவது வன்முறைத் தாக்குதல் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.மினுவாங்கொட பகுதியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மீது இரண்டு ஆயுதம் தாங்கிய நபர்கள் தாக்கு தலை நடத்தியுள்ளனர். (32)

## மன்னார் அமைப்புக்கள் கோரிக்கை

வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பினருக்கே வாக்குகளை அளிக்குமாறு மன்னார் மாவட்ட மக்களை மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. பேரினவாதக்கட்சிகளுக்குத் துணை போக வேண்டாம் என்றும் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (மி)

## 100இற்குக்குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடிவிட அரசு முடிவு

### -மாகாணகல்வி அமைச்சு வட்டாரம் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

குறைந்த எண்ணிக்கையான பிள்ளைகளுடன் செயற்பெற்றுவரும் பாடசாலைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து தெரியவருகையில், நூறிற்குக் குறைந்த மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகளை தற்போது கல்வி அமைச்சு மேற்கொண்டுவருவதாக மாகாணக் கல்விஅமைச்சின் செயலர் தெரிவித்துள்ளதாகத்தெரியவந்துள்ளது.(சோ)

## சனாதிபதி முறை, தேர்தல் முறைகளை மாற்றும் மக்கள் ஆணை கோரி இத்தேர்தல் நடைபெறுகிறது

### -சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஒழித்துக்கட்டி தேர்தல் முறையைக்கோரி மாற்றி அமைக்க மக்களின் ஆணையை இந்தப் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைப்பற்றி சிந்திக்காத சனாதிபதிக்கு மக்கள் தகுந்த பதிலை வழங்குவார்கள்

### பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டைப் பற்றி சிந்திக்காது சனாதிபதி பொதுத்தேர்தலை நடத்துகிற போது வாக்களிக்கின்ற மக்கள் தகுந்த பதிலை வழங்குவார்களென பிரதமர் ரணில் கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேற்று உரையாற்றும் போது பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்,நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் மக்களுக்கு முழுமையான பாரத்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சிங்கள வகுப்புகள் ஆரம்பம்

ஆண்டு 5 மாணவர்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை சிங்களத்தில் சரளமாகப் பேச,எழுத,வாசிக்கக் கூடியதான புதிய வகுப்புகள் 2004.02.15 ஞாயிறு காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாவீரர் படிப்பகம் முன்பாக அமைந்துள்ள K.S.K கணினி பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. ஆசிரியர்:- திரு.A.தேவசகாயம் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி) நிர்வாகம். (சி.8771)

### N.E.C

A-9 வீதி கிளிநொச்சி வணிகமாணி பட்டப்படிப்பு வகுப்புகளும் கலைமாணிப்பட்டப் படிப்பு (G.A.Q.), (B.A.) வகுப்புகள் 14-02-2004 அன்று ஆரம்பம். நேரம் 4.00 மணி.(4223)

### ஆசிரியர் போட்டிப்பரீட்சை

தமிழ்மொழிமூல ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் புதுக்குடியிருப்பு மாவீரர் படிப்பகத்திற்கு முன்பாக அமைந்துள்ள K.S.K கணினிப் பயிற்சி நிலையத்தில் சனி, ஞாயிறு நாட்களில் பி.ப. 1.30-3.30 வரை நடைபெறுகின்றன.-நிர்வாகம். (சி.8770)


# மாவட்டரீதியாக பா.உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் ஆணையகத்தால் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டம் 20 பேரும், ஹம்பஹாவில் 15 பேர், களுத்துறை 10பேர், கண்டி 12பேர், மாத்தளை 05 பேர், நுவரெலியா 07பேர், காலி10பேர், மாத்தறை 08பேர், அம்பாந்தோட்டையில் 07பேர், யாழ்ப்பாணம் 09பேர், வன்னியில் 06பேர், மட்டக்களப்பில் 05பேர், திகாமடுல்லமா 07பேர், திருகோணமலை 04பேர், குருநாகல் 16பேர், புத்தளம் 08பேர், அநுராதபுரம் 08பேர்,பொலநறுவை05பேர், பதுளை 08பேர், மொனறாகலை 05பேர், இரத்தினபுரி 10பேர், கேகாலை09 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும். மேற்கூறப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையில் 196 பேர் உள்ளனர். இதனடிப்படையில் மிகுதி 29 பேர் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை விட மேலதிகமாக 03 பேரை தெரிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. ஏனெனில் சட்ட ரீதியான பிரச்சினைகள் ஏதும் வருமாயின் அம்மூன்று பேரிலிருந்து ஒருவர் அப்பதவிக்கு ஆணையாளரால் நியமிக்கப்படுவார்.(32)

# பூநகரி பிரதேச செயலர்பிரிவு பெருவிளையாட்டுப் போட்டி

(அலுவலகசெய்தியாளர்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2004 ஆம் ஆண்டிற்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

அன்றைய தினம் பூநகரி நல்லூர் எவரெடி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கபடிப்போட்டியில் நல்லூர் எவரெடி விளையாட்டுக் கழகம் 70:46 என்ற புள்ளி அடிப்படையில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகத்தை வென்றது.

பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் 38:20 என்ற புள்ளி அடிப்படையில் நல்லூர் எவரெடி விளையாட்டுக் கழகத்தை வென்றது.

அடுத்து பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழகம், கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகத்தை ஒரு ஓட்டம் எடுத்து வெற்றிபெற்றது.

பெண்களுக்கான எல்லே போட்டியில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் நல்லூர் எவரெடி விளையாட்டுக் கழகத்தினை 3:2 என்ற கோல் அடிப்படையில் செந்தாரகை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக க.புவனேந்திரராசா, வே.சிவனேசன், ப.ஆனந்தராசா ஆகியோர் கடமை புரிந்தனர்.

இன்று குமுழமுனை சென் அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் வலைப்பந்தாட்டப்போட்டியும், முழங்காவில் விளையாட்டு மைதானத்தில்கிரிக்கெட்போட்டியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மகா கும்பாபிஷேகத்திற்கு ஏற்பாடு

திருகோணமலை பாலையூற்றில் பூம்புகார் முத்து மாரியம்மன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகத்தை நடத்த ஆலய பரிபாலனசபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒருபக்கம் பிரிமா மாஆலையும், மறு பக்கம் டோக்கியோ சீமெந்து ஆலை, கப்பல் இறங்குதுறை, மூன்று பக்கங்களும் கடல் சூழ ஒரு மலையுச்சியில்' இவ்வாலயம் அமைந்துள்ளது. சுமார் 300 குடும்பங்கள் பூம்புகார் பிரதேசத்தில் வாழ்கின்றன. இவ்வாலயத்துக்கு மகா கும்பாபிஷேகம் செய்வதற்கான பணியில் ஆலயபரிபாலன சபையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கென கிட்டவுள்ள கட்டுபாட்டுப்பகுதியில் வாக்குச் சாவடி

## - அரசாங்க அதிபர்களுடன் உ.தே.ஆணையாளர் ஆராய்வார்

(கொழும்பு)

வட-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தலின் போது வாக்களிப்பதற்கான ஒழுங்குகள் சம்பந்தமாக எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்களுடனும், மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுடன் கலந்தாலோசனை நடத்தவுள்ளார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள வாக்காளர்களுக்கு அப்பிரதேசத்திற்கு மிக கிட்டவுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கொத்தணிமுறையிலான வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும், அவை பற்றிய விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிகிழக்கு, மற்றும், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களாகவுள்ளன. இவர்களுக்கு முகமாலையில் கொத்தணிமுறையிலான வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் முல்லைத்தீவு, வவுனியாவடக்கு, மடு பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு ஓமந்தையிலும், உயிலங்குளத்திலும் கொத்தணி முறையில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. திருகோணமலையில் மூதூர் கிழக்குப் பிரதேசம் இராணுவகட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளமையால் இதற்கு இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்திலே வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. மட்டக்களப்பில் போரதீவுபற்று, பட்டிப்பளை, மண்முனைமேற்கு, வாகரை ஆகிய பிரதேசங்களும், ஏறாவூர்பற்று, வாழைச்சேனை, கிரான் ஆகிய பிரதேசங்களின் ஒரு பகுதி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ளன, இப்பகுதிகளில் வாழும்மக்களுக்கு களுவாஞ்சிக்குடி குருக்கள் மடம், மண்முனை, செங்கலடி, வாழைச்சேனை, கிரான் ஆகிய இடங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. எனினும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வசிப்பவர்கள் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதிக்கு பெருந்தொகையான வாக்காளர்கள் சென்று வாக்களித்துச் செல்வதற்கு நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (32)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் பளை பொதுச் சுகாதார பரிசோதகரின் ஒத்துழைப்புடன் பளை நகர்ப் பகுதியில் உள்ள கட்டாக்காலி நாய்கள் நச்சு மருந்து போட்டு அழிக்கப்பட்டுள்ளது. (11)

# மன்னார் அரச அதிபரைச் சந்தித்த பிரஜைகள் குழு தமக்குள்ள தேவைகள் குறித்து பிரஸ்தாபிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவினர் தமக்குள்ள தேவைகள் நெருக்கடிகளை நிவர்த்தி செய்து தருமாறு மன்னார் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

அரசாங்க அதிபர் விசுவலிங்கத்தை மன்னார் செயலகத்தில் சந்தித்த பிரஜைகள் குழுவினர் மன்னார் நகரப்பகுதியில் அகற்றப்படாதுள்ள குப்பை கூழங்களால் பொதுச்சுகாதாரத்துக்கு கேடு விளைகிறது. இவற்றைச் சீரான முறையில் தொடர்ந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து மன்னார் மாவட்ட மக்களின் வைத்திய சேவைசீராக நடைபெற ஆவன செய்யவேண்டும்.

தனியார் பேருந்து சேவையில் இடம்பெறும் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட்டு சீரான சேவை நடைபெற நடவடிக்கைஎடுக்க வேண்டும். போன்ற கோரிக்கைகள் உள்ளிட்ட பலகோரிக்கைகளை முன்வைத்தனர். இவற்றைக் கேட்டுக் கொண்ட அரசாங்க அதிபர் இவற் றிற்கான நடவடிக்கையில் தாம்உடன் இறங்க உள்ளதாக வாக்குறுதி அளித்துள்ளார். (மி)

# -திருகோணமலை மாவட்டத்தில்- கண்ணிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம்

(திருகோணமலை)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் யுனிசெவ் அமைப்புடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் கண்ணிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக சமூக வரைபடமாக்கல் செயற்பாடு ரிதியாய்க் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. சமூக வரைபடத்தில் திரியாய்ப் பிரதேசத்தில் உள்ள முக்கிய கட்டடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வயல்நிலங்கள், ஆறுகள், குளங்கள், கோயில்கள் மற்றும் மிதிவெடி இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்கள், மிதிவெடிகள் அகற்றப்பட்ட இடங்கள் ஆகியன குறித்துக் காட்டப்பட்டது.

அத்தோடு கிராமங்களின் வரலாறும் அக் கிராமங்களைச் சேர்ந்த முதியோர்கள், கிராம அதிகாரிகள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து வெண்புறா நிறுவனத்தினால் திரட்டப்பட்டது.

திரியாய் தமிழ் பாடசாலையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திரியாய் கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட திரியாய், செந்தூர், கட்டுக்குளம், கல்லம்பத்தை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், கிராம அதிகாரிகள், கிராம முன்னேற்றச்சங்க நிர்வாகிகள், மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரும் பங்குபற்றினர். (25)

# 136 மில்· வாக்குச் சீட்டுக்கள் அச்சிட பணிப்பு

(கொழும்பு)

நடைபெறவுள்ள தேர்தலுக்கு 136 மில்லியன் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளன.இது தொடர்பான கட்டளை அரசாங்க அச்சகத்திற்கு கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவை அச்சிடப்படுமென கூறப்படுகிறது.

## புதிய நிர்வாகம் தெரிவு

(திருகோணமலை)

ஈச்சிலம்பற்று ஸ்ரீசண்பகா மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் அதிபர் ப.மதிபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் அதில் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ப.மதிபாலசிங்கம், செயலாளர் த.மோகனசிங்கம், பொருளாளர் த.ரங்கநாதன் (ஆசிரியர்) ஏழு உறுப்பினர்களைக் கொண்டநிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டனர். 150க்கு மேற்பட்ட பெற்றார் நலன்விரும்பிகள் பங்குபற்றினர். (25)

## மெய்வல்லுநர் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளி. புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு எதிர்வரும் 18 ஆம் திகதி (புதன்) நடைபெறவுள்ளது.

மேற்படி பாடசாலை அதிபர் அருட்சகோதரி எலிசபெத்தம்மா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பாடசாலை அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்டுள்ளனர்.(சோ)

# சாவு அறிவித்தல்

## இரத்தினமணி (மணி)

பருத்தித்துறை புலோலி தெற்கு புலோலி கந்தமுருகேசனார் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் முத்தம்மா தம்பதிகளின் மகள் இரத்தினமணி (மணி) 09.02.2004 அன்று கொழும்பில் காலமானார். இவர் சண்முகநாதனின் அன்பு மனைவியும், கலையரசி (லண்டன்) சுகந்தன் (லண்டன்) கோகிலா (பிரதேசசபை துணுக்காய்) ஆகியோரின் பாசமிகு தாயும் தவராசா(லண்டன்)வின் அன்பு மாமியும் கஸ்தூரி, கோகிலன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 11.02.2004 பிற்பகல் 2.00 மணிக்கு புலோலிதெற்கில் உள்ள அவரின் வீட்டில் இருந்து புலோலி இந்து மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனக்கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:-
ச.கோகிலா
(மகள்)

(சி-7155)

# அறிவித்தல்

**யுனிசெவ் [UNICEF] நிறுவன அனுசரணையின் கீழ் நடைபெறும்**
**முல்லைத்தீவு மாவட்டத்தின் நடமாடும் செயலமர்வு**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை காலமும் பிறப்பு, இறப்புப் பத்திரம் பெறாதவர்கள், திருமணப்பதிவினை மேற்கொள்ளாதவர்களின் நன்மைகருதி யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் முல்லைத்தீவு, துணுக்காய் பாண்டியன்குளம் ஆகிய இரு பிரதேசச் செயலர்கள் பிரிவில் நடமாடும் சேவை நடைபெற உள்ளது. துணுக்காய் பிரதேசச் செயலர் பிரிவில் 12.02.2004 அன்றும் பாண்டியன்குளம் பிரதேசச் செயலர் அலுவலகத்தில் 13.12.2004 அன்றும் நடமாடும் சேவை நடைபெற உள்ளது.

குறிப்பு:- வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைவரும் இப்பதிவினை மேற்கொள்ளலாம். இச்சேவை மூலம் பயன்பெறவும்.

**மேலதிக மாவட்ட பதிவாளர்**
**முல்லைத்தீவு.**

(சி-7154)

# அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட ஈராக்கியரிடையே கருத்தொருமை இல்லை!

## -ஐ.நா.பொதுச் செயலாளர் கருத்து



**அமெரிக்காவின் தலைமையிலான ஆதிக்கத்தில் இருந்து அதிகாரத்தைப் பெறும்முறை தொடர்பாக ஈராக்கியர்கள் மத்தியில்கருத்தொருமித்த நிலை இல்லாமை குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கவலை தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகளின் மத்தியில் அவர் இவ்வாறு கூறிய தாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கல் ஷியா முஸ்லிம்கள் வெகுவிரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என விரும்புகின்றனர்.

மேலும் சிலர் ஆட்சி மாற்றத்திற்காக நிறுவப்பட்ட அமைப்புக்களுக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுமாறு கூறுகின்றார்கள்.

இந்நிலையில் ஈராக்கில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பாக கண்டறிவதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பிரதிநிதிகள் ஒருவார காலத்தினுள் அந்த நாட்டிற்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

ஐக்கய நாடுகள் சபை பொதுச் செயலாளர் கொபிஅனான் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.


எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஈராக்கின் நிர்வாகத்தை ஈராக்கியர்களிடமே கையளிக்க அமெரிக்கா தயாராகி வருகின்றது. இந்நிலையில் ஐ.நா.பிரதிநிதிகள் ஈராக் வருகை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐ.நா.வின் சிரேஷ்ட இராஜ தந்திரியான லக்சஇப்ராகிம், ஈராக்கின் ஷியா முஸ்லிம் தலைவரான அப்துல்லா அலிகல் திஸ்ரேனியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என கொபி அனான் அறிவித்தார்.

# மலையைக் குடைந்து பரிசோதனை

செவ்வாய்க்கிரகத்தில் ஸ்பிரிட் ஆய்வுக்கலம் மண்டியன் என்ற மலைப்பகுதியைக்குடைந்து பரிசோதனை செய்துள்ளதாக நாசா அறிவித்துள்ளது.

2.65 மில்லிமீற்றர் துவாரத்தையிட்டு இது தனது பரிசோதனையை மேற்கொண்டது.



செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட ரோவர் ஸ்பிரிட் விண்கலத்தின் "கை" அல்லது கருவியின் முனைப்பகுதி இது செவ்வாயின் பாறைகளை சேகரிக்கும் பணியில் ஈடுபடுகிறது.

# ஆறு மில்லியன் வடகொரிய மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் அபாயம்!

## -சர்வதேச நாடுகளிடம் உதவிகோரல்

வடகொரியாவில் ஆறு மில்லியன் மக்கள் பட்டினிச் சாவை எதிர் கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அடுத்து வரும் இருமாதங்களுக்கு கர்ப்பிணித் தாய்மாருக்கும், குழந்தைகளுக்கும் மட்டுமே உணவு வழங்கக்கூடியதாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது.

அதுமேலும் தெரிவிக்கையில்; வடகொரியாவில் கடந்த ஒன்பது வருடங்களாக வெள்ளப்பெருக்கு மற்றும் தவறான பொருளாதாரக் கொள்கைகளாலேயே இந்த நிலை வடகொரியாவுக்கு ஏற்பட்டுள்ளதாகவும்,

இந்நிலையில் வடகொரியாவின் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சர்வதேச நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.



இந்தோனேசியாவில் பபுவா மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் சேதமுற்ற தனது பாலசாலைக்கருகில் நடந்து செல்லும் சிறுவன்.

# கிளர்ச்சியாளர் வசமிருந்த நகரம் கெயிட்டி அரச படைகளிடம் வீழ்ச்சி!

ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த நகரம் ஒன்றை கெயிட்டிய அரச படையினர் மீளக்கைப்பற்றி உள்ளனா.

கெயிட்டி சனாதிபதியின் ஆதரவாளர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற ஐந்துநாள் சண்டையில் அரசாங்கம் பெற்ற முதல்வெற்றியாக இது அமைந்துள்ளது.

இதேவேளை அடிஸ்டைட் கெயிட்டியில் சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது சனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

இவரை பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான சதிப்புரட்சிக்குப் பின்னர் அமரிக்கா தலைமையிலான படைகள் கெயிட்டியை ஆக்கிரமித்தன. அதன்பின்னர் அடிஸ்டைட் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் நடைபெற்று பத்து ஆண்டுகளின் பின்னர் கிளர்ச்சிப் படைகளின் செயற்பாடு மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

# தென்னாபிரிக்க பொதுத்தேர்தல் ஏப்பிரல்—14ல் நடைபெற ஏற்பாடு

(ஜெகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் பொதுத் தேர்தல் வரும் ஏப்பிரல் மாதம் பதின் நான்காம் திகதி நடைபெறவுள்ளதாக தென்னாபிரிக்க சனாதிபதி தபுமுபேகே தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கை 1994 ஆம் ஆண்டு நீக்கப் பட்டதன் பின்னர் அந்நாட்டில் நடை பெறும் மூன்றாவது தேர்தல் இது வாகும்.

இத்தேர்தலில் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# வைகோவின் விடுதலையைத் தடுக்கும் தமிழக அரசின் மனு நிராகரிப்பு!

(சென்னை)

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவின் பிணை வழங்கலை தமது மனுமீதான தீர்ப்பு வரும்வரை நிறுத்தி வைக்க வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கையை சென்னை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

வைகோவின் பிணை வழங்கலை ஆட்சேபித்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான் இதனை நிராகரித்தார்.

வைகோவிற்கு பிணை வழங்கும் போது இவ்வழக்கின் தீவிரத்தை பொடோ சிறப்பு நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டதாகவும் தமிழக அரசு கடந்த சனிக்கிழமை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டிருந்தது.



துருக்கி -கொன்யா நகரில் இடிந்து விழுந்த10 மாடிக்கட்டட சிதைவுகளில் இருந்து 6 நாட்களின் பின் உயிருடன் மீட்டெடுக்கப்பட்ட 16வயது இளம் பெண்.

# அதிரடி நடவடிக்கைக்கு கூட்டு இராணுவப்பிரிவு; பிரிட்டன், பிரான்ஸ் அமைக்க உத்தேசம்

பிரிட்டனும், பிரான்சும் அதிரடி நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய கூட்டு இராணுவப் பிரிவுகளை அமைக்கவுள்ளன.

ஐரோப்பாவின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் கேந்திர முயற்சியின் ஓர் அம்சமாக இத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டத்தில் வெளியிடப்படும் என்று இங்கிலாந்து நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இந்தச்செய்தி குறித்து பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு எதுவும் கூறமறுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாட்டில் பிரிட்டன், பிரான்ஸ் கூட்டுப்படைகள் இயங்கும் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து அங்கத்தவர்களும் இதனை ஏற்றுக்கொள்ள வேணடுமென இவ்விரு நாடுகளும் விரும்புகின்றன.

## பாதுகாப்பு வேலி அமைப்பதை பரிசீலிக்க இஸ்ரேல் இணக்கம்

(டெல்அவிவ்)

இஸ்ரேல் தான் அமைத்துவரும் பாதுகாப்பு வேலி குறித்து மறு பரிசீலனை செய்ய முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் அரசாங்கத்தின் சட்ட வல்லுனர்கள் நேற்று முன்தினம் அந்த நாட்டின் உயர் நீதி மன்றத்தில் விளக்கமளித்தனர்.

தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வேலி காரணமாக பலஸ்தீனருக்கு தமது விவசாய நிலங்கள், அயலிலுள்ள கிராமங்கள், பாடசாலைகள் போன்ற வற்றிக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் இஸ்ரேலிய உயர்நீதி மன்றம் என்பவற்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காஸா நகரில் இஸ்ரேலிய உலங்கு வானூர்தியின் தாக்குதலில் பலியான இஸ்லாமிய ஜிகாத் போராளி அசிஸ் அலசாமியின் மனைவி அவரது இறுதியஞ்சலியை செலுத்துகிறார்.

## 02

*தேசிய ஐக்கிய முன்னணி தலைவி பேரியல் அஷ்ரப், மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தன, மக்கள் கட்சி செயலாளர் நவரட்ண, தேச விடுதலை மக்கள் முன்னணி செயலாளர் நவரட்ணஆகியோர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்தனர்.

*காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினரின் முற்றுகையொன்றில் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் தலைவர் எனக்கருதப்படும் யஸீர் அல் அசெய் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

## 03

*பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.விற்கு பூந்தமல்லி பொடோ நீதிமன்றம் நிபந்தனையுடனான பிணை மனுவில் வெளிவர அனுமதி வழங்கியது.

*துருக்கி தலைநகர் அங்காராவுக்கு அருகே ஷெல்குமு எனுமிடத்தில் 10மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 8பேர் பலி. 25ற்கு மேற்பட்டோர் படுகாயம்.

*வாஷிங்டனில் அமெரிக்க செனட் சபையின் பெரும்பான்மைத் தலைவர்கள் அலுவலகத்தில் 'றிஸின்' நஞ்சுப் பௌடர் அடங்கிய தபால்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

*ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி, அமெரிக்கப் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சட் ஆர்மிரேஜ்யை சந்தித்து இலங்கையின் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடினர்.


தடை அகற்ற ஆலோசனை

## 05

*ஜேர்மன் பேர்ளினில் ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு இராஜாங்க செயலர், ஜேர்மனியின் வெளிவிவகார பிரதி செயலர் ஆகியோரை அரசியல் துறைப்பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்து இலங்கையில் நடைபெறும் சமாதான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

*காங்கேசன் துறை வீதி 8ஆம் கட்டையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அளவெட்டி அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜனா, கிட்டு ஆகிய போராளிகளை படையினர் மூர்க்கத்தனமாகத் தாக்கினர்.

*ஓமந்தை சோதனைச் சாவடி யூடாக சயனைற்றுடன் சென்ற போராளிகளைக் கைதுசெய்ய சிறிலங்காப் படையினர் முயற்சி.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கிளி. நகரில் நிறுவப்பட்ட சர்வதேச பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

## 06


*போ.நி.க.குழுவின் புதிய தலைவர் டொான் புறூவ் ஹெறவ்டே பிரதமர் ரணிலைச் சந்தித்துப் போர் நிறுத்த உடன்பாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்தார்.

*ஐக்கிய மக்கள் முன்னணி கட்சியாகவும், வண்ணத்துப்பூச்சி அதன் சின்னமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.


## சிறிலங்காவின் சுதந்திரதினத்தில்...


வலி. வடக்கு உண்ணாவிரதம்


கைதடி உண்ணாவிரதம்


வெறிச்சோடியுள்ள யாழ். நகரம்


சனாதிபதி தேசியக்கொடி ஏற்றுகிறார்


மல்ரிபரல் பவனி


பிரதமருடன் சனாதிபதி

# கடந்த வாரத்தில்....

*ஜப்பானின் 80 துருப்பினர் அடங்கிய குழு ஈராக் நோக்கிப் புறப்பட்டது.

## 04

*சிறிலங்காவின் 56வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்ட கறுப்பு நாள் நிகழ்வுகளினால் இயல்புநிலை பாதிப்பு.

*வலிகாமம் வடக்கின் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தோர் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி உண்ணாவிரதம்.

*சிறிலங்காவின் 56வது சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் சனாதிபதி தலைமையில் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. பிரதமர் கலந்துகொண்டார். நவீன இராணுவ வாகனங்களின் அணிவகுப்பு நடைபெற்றது.

*ஐ.எல்.18ரக நான்கு இயந்திரங்களைக் கொண்ட சிறீலங்கா சரக்கு விமானம் பண்டாரநாயக்க விமானநிலையத்தில் தரையிறங்கும் போது தரையில் மோதிச் சேதமடைந்தது.

*உடுவில் பிரதேச செயலகக்கட்டடம், செயலக வாகனம் என்பன இனந்தெரியாதோரால் அடித்து சேதமாக்கப்பட்டன.

*தேசப்பற்று தேசிய முன்னணியின் முதலாவது கூட்டம் மகரகமவில் நடைபெற்றது.

*மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி ஆரம்பிக் கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

*நிதர்சன வெளியீடான ஊர்போகும் மேகங்கள், வரும் பகை திரும்பும் ஆகிய ஒலிநாடாப் பேழைகள் கைலாசபதி அரங்கில் வெளியிடப்பட்டது.

*ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ நகர சுரங்க ரயிலில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 40பேர் பலி; 100க்கு மேற்பட்டோர் காயம்.



* இந்தியப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

* அரசியல் துறைப் பொறுப்பாளரை சந்தித்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான ஜோன் வோல்ஸ் குஸ்ணர்கான் இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதியின் அபிவிருத்திக்கான அவசர உதவிகளை வழங்கும் திட்டத்தில் தொடர்ந்து எல்லையற்ற ஆதரவு வழங்கப்படுமென உறுதி அளித்தார்.


ஜோண்வோல்ஸ்குஸ்ணர்கானுடன் சந்திப்பு

## 07

* பொடோ சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டிருந்த ம.தி.மு.க. பொதுச்செயலர் வை.கோ. வேலூர் சிறையிலிருந்து விடுதலை.


பிணையில் விடுதலை

* நாடாளுமன்றம் நள்ளிரவு கலைக்கப்பட்டதாகவும், வேட்பு மனுக்கள் எதிர் வரும் 17-24 ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமெனவும், தேர்தல் ஏப்பிரல் 2ம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக் கப்பட்டது.


நாடாளுமன்ற கலைப்பைக்கேலி செய்து தென்பகுதியில் தெருவெளி நாடகம்

## 08

*அனுராதபுரம் கெப்பிட்டி கொலாவையில் கிறிஸ்தவ தொண்டு நிறுவனமான "வேல்ட்விஷன்" அலுவலக கட்டடம் பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்தது.

* ஐ.தே.க.வின் நிலைப்பாட்டை விளக்கும் செய்தியாளர் மாநாட்டை கட்சியின் தவிசாளர் மலிக் சமர விக்கிரம, கருஜய சூரிய, ராஜித சேனாரட்ன நடத்தினர்.


செய்தியாளர் மாநாடு

* தே.பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கதிர்காமர் தகவல் தொடர்பு அமைச்சராகவும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மு.ஜயரத்தின தகவல் தொடர்பாடல் அமைச்சராகவும் சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தனர்.

# சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சில் பலியானோர் நினைவாக நினைவாலயம்

## சாவகச்சேரியில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுவீச்சுக்களின் போது அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாக நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.**

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது சிறிலங்கா விமானப்படையினரின் விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களில் அப்பாவித்தனமாக பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ் மக்கள்மீது இனவாதிகள் நடத்திய படுகொலைகளையும், வன்முறைத்திணிப்புக்களையும் தமிழ் மக்கள் என்றுமே மறந்துவிடக்கூடாது என்பதற்காகவும் இவ்வாறான நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரில் உள்ள நவீன சந்தைக்கட்டடத்திற்கு எதிரே நிறுவப்படவுள்ள இவ் நினைவாலயத்தை அமைப்பதற்குரிய ஏற்பாட்டு நடவடிக்கைகளில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். (33)

# சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் தேசிய எழுச்சிப் பேரவை ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் பல்வேறு சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றனர்.

அந்த அடிப்படையில் போரினால் பாதிக்கப்பட்டு தம்கல்வியைத் தொடர முடியாத சூழ்நிலையில் வளர்ந்து வரும் மாணவர்களை இனம் கண்டுஅவர்களுடைய கற்றலுக்குரிய பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் ஆங்காங்கே இடம்பெற்று வரும் கலாச்சாரச் சீரழிவுகள், சமூகப் பிரச்சினைகள் என்பவற்றை இனம் கண்டு அவற்றுக்குரிய பரிகாரங்களைத் தேடும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (33)

# கள்ளநோட்டுக்களை அச்சிட்ட இருவர் வவுனியாவில் கைது

(செட்டிகுளம்)

வவுனியாவில் கள்ள நோட்டுகள் அச்சிட்ட 15 வயது உடைய சிறுவன் உட்பட இரண்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து பணம் அச்சிடும் இயந்திரம், கணினி போன்றனவும் 1000ரூபா போலி நோட்டுக்கள் மூன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மஹாகச்சக்கொடிய என்ற பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (21)

# பரவலான வழிப்பறிக் கொள்ளைகளால் யாழ்.குடாநாட்டு மக்களிடையே பீதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பகல் கொள்ளைச் சம்பவங்களும், வழிப்பறிச் சம்பவங்களும் அதிகரித்து வருவதால் மக்கள் மத்தியில் பீதிநிலவுகிறது.

அண்மைக்காலமாக இனந்தெரியாத கும்பல்களால் திடீர் திடீரென நடத்தப்படும் இவ்வாறான அபகரிப்புச் சம்பவங்களால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டிருப்பதாலேயே இப்பீதி நிலை மக்கள் மத்தியில் நிலவுகிறது.

இவ்வாறு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் ஹயஸ் வான் போன்றவற்றில் வந்து இவ்வாறான சம்பவங்களை நடத்தி விட்டுத் தலைமறைவாகும் இக்கும்பல்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் சிறிலங்காப் பொலிசார் மேற்கொள்ளவில்லை.

இதனால் வீதிகளில் நடமாடக்கூட அஞ்சிவருகின்றனர். இதே வேளை இக் கொள்ளைக்கும்பல்களை மடக்கிப் பிடிப்பதற்குரிய நடவடிக்கைகளில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்குழு விழிப்புடன் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம் எப்போது?

(மன்னார்)

மன்னார் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை விநியோகம் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பெற்றோர் மிகுந்த நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் மாணவருக்கான இலவச சீருடை இவ்வாண்டில் சனவரி 22-ம் திகதி முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இற்றைவரை மாவட்டத்தின் எந்தப் பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

# முல்லை. மாவட்டத்தில் நடமாடும் செயலக அமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுனிசெவ் நிறுவன ஆதரவில் நடமாடும் செயலக அமர்வு இம்மாதம் இரு இடங்களில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12.02.2004 வியாழக்கிழமை துணுக்காய் பிரதேசச் செயலகத்திலும் 13.02.2004 வெள்ளிக்கிழமை பாண்டியன் குளம் பிரதேசச் செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்தில் இதுவரை இப்பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இங்கு இப்பதிவினை மேற்கொள்ளுமாறு முல்லைமாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் கேட்டுக்கொள்கின்றார். (20,24)

# வவுனியாவில் வாகனத் திருட்டுக்கள் அண்மை நாட்களாக அதிகரிப்பு

(செட்டிகுளம்)

வவுனியாவில் அண்மை நாட்களாக மோட்டார் வண்டி திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து இருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். திட்டமிட்டு சில நபர்கள் இரகசியமாக இவ்வாறு திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே இவ்வாறு சம்பவத்தில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து களவாடப்பட்ட மோட்டார் வண்டிகள் சில கைப்பற்றப்பட்டன.

தற்போது மோட்டார் வண்டியை நிறுத்தி சில நிமிடங்களில் மோட்டார் வண்டிக்கு என்ன நடக்கின்றது என்று தெரியாத அளவுக்கு களவு இடம்பெற்று வருகின்றது. நேற்று முன்தினம் குருமன்காட்டுப் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை நெளுக்குளம் பகுதியிலும் சில நாட்களுக்கு முன்னர் பூங்கா வீதியிலும் ஒரே வகையில் களவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

# புலியொன்றின் தொல்லையால் கால்நடைகளுக்கு ஆபத்து!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கல்மடுநகர் 10ஏக்கர் திட்டத்தையண்டிய காட்டுப் பகுதியில் புலியின் தொல்லை தொடர்வதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதி வாசியான செல்லையா செல்வநாதன் மேய்ச்சலுக்கு விடப்பட்டு காணாமல் போன தனது மாடுகளைத் தேடிச் சென்ற போது அங்கு கால் நடைகளின் எலும்புகளும் எச்சங்களும் கிடக்கக்கண்டுள்ளார்.

இதன் மர்மத்தையறிய மேற்படி நபர் பிறிதொரு தினத்தில் பதுங்கியிருந்த வேளையில் புலியொன்று கால் நடைகளை வேட்டையாடுவதைக் கண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் கால் நடைகளுக்கு ஆபத்து எதிர்நோக்கப்பட்டுள்ளது. (12)

## பாம்புக் கடிக்கு இலக்கானார்

(மல்லாவி)

பாம்புக்கடிக்கு இலக்காகி மல்லாவி மருத்துவமனையில் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பெற்று வருகின்றார். செல்வபுரம் வவுனிக்குளத்தைச் சேர்ந்த வெ.செல்வநாயகம் வயது 47 என்னும் குடும்பஸ்தரே பாம்புக் கடிக்கு இலக்கானார்.

கடந்த ஞாயிறன்று பிற்பகல் 3.00 மணிக்கு தனது வயலில் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தவர் வயல் வரம்பில் சுருண்டு கிடந்த பாம்பி னால் கடியுண்டு மயக்க நிலை யடைந்தார். பின் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களால் உடன் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (24)

## நிர்வாகத் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கனகபுரம் இளந்தாரகை விளையாட்டுக்கழக நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு நேற்று முன்தினம் கனகபுரம் கிராம சேவை அலுவலர் சு.பசுபதிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கனகபுரம் கருணாகரப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடைபெற்ற மேற்படி தெரிவில் தலைவராக த.தயாளன், துணைத் தலைவர் சி.கனகேந்திரன், செயலர் செ.ம.ஜெயரத்தினம் துணைச் செயலர் ந.கலாரஞ்சினி, பொருளாளர் பே.அருளப்பு மற்றும் 7 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பெற்றனர். கனகபுரம் கி.அ.சங்க தலைவர் அ.கனகரத்தினம் மற்றும் பொதுமக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (சோ)

## நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

அரசாங்கதிணைக்கள ஊழியர் தொழிற்சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊழியர்களின் நட்டஈடு சூத்திர முறையை ரத்துச்செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தமனுவில் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் தொழில் ஆணையாளரும் பிரதிநிதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

# தேசிய மட்டத்தில் முதல்நிலைக் கிளையாக கிளிநொச்சி தமிழீழ வைப்பகக் கிளை தெரிவு

(அலுவலகசெய்தியாளர்)

தேசிய மட்டத்தில் முதலாம் நிலை முதன்மைக்கிளையாக



கிளிநொச்சி தமிழீழவைப்பகக் கிளை தெரிவுசெய்யபெற்றதுடன் அதற்கென தமிழீழத்தைச் சித்தரிக்கும் கேடயமும் வழங்கி கௌரவிக்கப் பெற் றது.

கடந்த வியாழக் கிழமையன்று கிளி நொச்சியில் நடை பெற்ற தமிழீழ வைப்பக ஊழியர்களுக்கான ஆண்டிறுதி (2003) விருந்துபசார நிகழ்வின் போதே மேற்படிகேடயம் வழங்கப்பெற்றது.

தமிழீழவைப்பகக்கிளை கிளி நொச்சிக்கிளை மேலாளர் மா.சு தர்சன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் தமிழீழவைப்பகம் அனைத்துப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

தேசிய மட்டத்தில் முதலாம்நிலை முதன்மைக்கிளையாக கிளிநொச்சி தமிழீழ வைப்பகக் கிளை தெரிவாகியுள்ளதுடன் இரண்டாம் நிலை முதன்மைக்கிளையாக முல்லை தமிழீழ வைப்பகக்கிளையும் ஊரகவளர்ச்சிக் கிளையில் விசுவமடுக்கிளையும தெரிவுசெய்யப்பெற்றதுடன் சிறப்புற செயற்பெற்ற 19பணியாளர்களுக்கு தகுதிக்குரிய பாராட்டுதலும் 32பணியாளர்களுக்கு பாராட்டுதல்களும் வழங்கி கௌர விக்கப் பட்டது.

வைப்பகக்கிளைகளை சிறந்த முறையில் நெறிப்படுத்திய மைக்காக ஆளுகைமேலாளர் ம.கியூபேட் அன்ரனி, நிதிமேலாளர் க.பாலகிருஸ்ணன் ஆகியோர் கௌரவிக்கப்பெற்றனர்.

தமிழீழவைப்பகப் பணிப்பாளர் அவைத்தலைமைப் பணிப்பாளர் ஆகியோர் தெரிவு செய்யப் பெற்ற கிளைகளுக்கு கேடயமும் பரிசில்களும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பிணையில் விடுதலை

(மன்னார்)

மன்னாரில் கடந்த 4ஆம் திகதி சிங்கக் கொடியை அகற்றியதாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட மூன்று பொதுமக்களை மாவட்ட நீதவான் எம்.எம்.அப்துல்லா நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்தார்.

இவர்களை மாவட்ட நீதிமன்றில் பொலிசார் முற்படுத்தியபோது, பிணை வழங்கிய நீதவான் மார்ச் 9ஆம் திகதி மீண்டும் ஆஜராகுமாறு பணித்தார். (மி)

# கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் கிளி நொச்சியில் இன்று திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கமக்கார்ர் அமைப்புக்களின் சம்மேளனச் செயலகம் இன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பெறவுள்ளது.

பரந்தன் நெற்பண்ணை முன்பாக புதிதாக அமைக்கப்பெற்றுள்ள மேற்படி கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனச் செயலகம் காலை 10.00 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப்பெறவுள்ளது.

இவ்வைபவத்தில் சகல கமக்கார அமைப்புக்கள் விவ சாயிகள், பொது மக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழி யர்களை கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# திருமலையில் ஓரணியில் போட்டியிட நான்கு தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். பிறேமச்சந்திரன் அணி என்பன இணைந்து ஒரு அணியின் கீழ் போட்டி இடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இரா.சம்பந்தன், துரைரட்ணசிங்கம் மற்றும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தரப்பில் மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகநாதன் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் கதிர்காமத் தம்பி உட்பட இக்கட்சியில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டமைப்பின் கீழேயே தேர்தல் பிரசாரக்கூட்டம் மற்றும் தேர்தல் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் இக் கூடத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்டத்தில் நெல்லின் விலை வீழ்ச்சி

அம்பாறையில் காலபோக நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

அறுவடை ஆரம்பிக்கப்பட்ட வேளை 65 கிலோக்கிராம் நெல்லின் விலை 1150ரூபாவாக இருந்தது. தற்சமயம் அது 850 ரூபாவாக குறைவடைந் துள்ளது.

இம் மாவட்டத்தில் இம்முறை 1லட்சத்து 35ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

# சனாதிபதியின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு முயற்சி

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைத்தமையை ஆட்சேபித்து சமாதானத்திற்கும் சனநாயகத்திற்குமான தேசிய மக்கள் முன்னணி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஆர்ப்பாட்டமானது சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்கள் பூர்த்தி ஆகும் தினமான எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வடக்கு-கிழக்கில் எமக்கு சாதகமான நிலை கிடைக்கும்

## - சிஹல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சிஹல உறுமய கட்சிக்கு சாதகமான பெறுபேறுகள் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக அதன் பிரச்சாரச் செயலாளர் உதய தம்மன்லிவ தெரிவித்துள்ளார்.

சிஹல உறுமய கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் சகல மாவட்டங்களிலும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

இதற்கமைய வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடைமுறை அமுலில் உள்ளதாகவும் அக்கட்சியின் பிரச்சாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடக்கு கிழக்கில் தமது கட்சிக்கு நல்ல பெறுபேறுகள் கிடைக்குமெனவும் இந்தப் பிரதேசங்களில் சிங்கள மக்கள் மாத்திரமின்றி தமிழர்களும் முஸ்லிம்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


# நீர்மின் நிலையங்கள் 60 நாட்களுக்கே இயங்கும்!

(கொழும்பு)

சிறிலங்காவின் நீர்மின் நிலையங்கள் இன்னும் அறுபது நாட்களுக்குமட்டுமே நீர்மின்சாரத்தை வழங்கக்கூடிய நிலையில் இருப்பதாக சக்தி வலுத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குக் காரணம் இங்கு காணப்படும் கடும்வரட்சியே எனவும் நீரேந்து பரப்பில் உள்ள நீர்மட்டம் 27 சதவீதத்தால் குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 | 11 |
| 12 | 02 |
| 1963 | 2002 |

அன்பின் திருவுருவாய்,
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய், ஊர்புகழும்
உத்தமனாக வாழ்ந்து, எமது குடும்பம்
வாழ வழிவகுத்த எங்கள் அன்புச்
செல்வமே, இரண்டாண்டென்ன
ஈராயிரம் ஆண்டானாலும் உன்
நினைவுகள் எம்மைவிட்டகலாதையா.

உன் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

அம்மா, சகோதரர்கள்,
மச்சான்மார்,மச்சாள்மார்,
மருமக்கள்.

## யாழிற்காய் விழுதெறிந்து நின்ற ரோஜாவின் 2ஆவது மலர்ந்த நினைவாய்



| யாழில் | யாழிற்காய் |
|---|---|
| 10 | 11 |
| 02 | 11 |
| 1979 | 2001 |

# லெப். கேணல் சிவனேசன்

**(வெள்ளை ,ஜக்கோல், புரூஸ்)**

**செல்லத்துரை புருஷோத்தமன்**

**[தெல்லிப்பளை,யூனியன் கல்லூரி மாணவன்]**

எதிரியின் கைப்பிடியுள் யாழ் சிக்கிக்கொண்டபின்பு
முந்நூற்றின் மேலாக முனைத்துலவிப் பகைக்காட்டில்
சாதனைசெய்து செய்து சாதனையே தழுவிய அம்
மேதகைய வேங்கைகளுள் வென்று வென்று மீண்டு வந்தோன்
பெயர் வெள்ளை, உடைவெள்ளை பேரழகன் உருவெள்ளை
நயந்தன்பு நண்பரென நாடெல்லாம் பலருடையான்
எல்லா இச்சிறப்புகளும் இனம் வாழும் மண் மீட்க
வல்லபுலனாய்வுக்காய் வைத்திருந்த மதியாளன்.

இவருடன் வீரச்சவடைந்த கப்டன் பருதியப்பன், கப்டன் தூயோன், கப்டன் ரூபன் ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(4215)

குடும்பத்தினர்.

## வன்னேரியில் மத்திய மருந்தகம்

வன்னேரிக்குளம் பகுதியில் மத்திய மருந்தகம் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யுனிசெப் அனுசரணையுடன் தமிழீழ சுகாதார சேவையினரால் இந்த மத்திய மருந்தகம் நிர்மாணிக்கப்பட்டது.

திறப்புவிழா நிகழ்வு பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறும்.

## குடிசை அமைக்க நிதியுதவி

(மன்னார்)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் மக்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் தற்காலிக குடிசைகளை அமைக்க மன்னார் கிராம அபிவிருத்தி நிறுவனம் உதவியளித்து வருகின்றது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தாயகம் திரும்பும் மக்களுக்கே இந்த உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் 75 குடும்பங்கள் இதனூடாக நன்மையடைந்துள்ளன.

12ஆயிரம் பெறுமதியான கிடுகு,மரம், தடிகள் என்பவற்றை இந்நிறுவனம் வழங்குகிறது. (மி)

## அறிவித்தல்

*துரை பல்பொருள் வாணிபத்தில் திருத்தவேலைக்காக தரப்பட்ட மணிக்கூடுகளை எதிர் வரும் 25.05.2004க்குள் மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தவறும் பட்சத்தில் நாங்கள் பொறுப்பானவர்கள் இல்லை என்பதனையும் தெரியப் படுத்துகின்றோம்.*

(4228) - உரிமையாளர்.

# பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இயங்கும் செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு கீழ்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை1** :ஆசிரியர்

தகைமைகள் :- க.பொ.த. உ/த சித்தி கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை (புவியியல், தமிழ் முக்கியமாகக் கவனிக்கப்படும்.

ஊதியத்திட்டம்:- $\frac{3000.00-4100.00}{(10X110)}$ + 2000.00

**பணிநிலை2** :பேணுனர் (பெண்கள்)

மேற்படி நிறுவனத்திற்குப் பிள்ளைகளைப்பராமரிப்பதற்கு ஆற்றலும் அனுபவமும் உள்ளோர் வேண்டப்படுகின்றனர்.

தகைமைகள் :- க.பொ.த.(சா/த) அல்லது ஆண்டு 8-11 உடன் 3ஆண்டிற்குக் குறையாத பட்டறிவு அல்லது ஆண்டு 7 இற்குக் குறைந்த கல்வியுடன் 5 ஆண்டிற்குக் குறையாத பட்டறிவு.

ஊதியத்திட்டம்:- $\frac{3500.00-4500.00}{(10X100)}$ + 2000.00 + 1000.00

**பணிநிலை3** :ஓய்வுபெற்றஅதிபர், ஆசிரியர், எழுதுனர்.

மேற்படிபணிநிலைக்கு தகைமையுள்ளவர்களும் வேண்டப்படுகின்றனர்.

ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

*மேற்படி பணிநிலை 1,2,3 ஆகியவற்றிற்குத் தகைமையுடையோர் எதிர்வரும் 16.02.04 அன்றுமு.ப.10.00 மணிக்கு கிளிநொச்சி தமிழீழ மாணவர் அமைப்புப் பணிமனைக்குத் தகுந்த ஆவணங்களுடன் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர்.*

நிர்வாகம்,
செஞ்சோலை.

தொடர்பு முகவரி
தமிழீழ மாணவர் அமைப்பு,
பரவிப்பாஞ்சான்,கிளிநொச்சி.

(4229)



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி. மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-02-2004

## யாரைச் சொல்வது!

சிறிலங்காவில் உள்ளது போன்று விநோதமானதும், கேலிக்கிடமானதுமான அரசியல் உலகில் வேறு எங்காவது உள்ளதா என்றால் சந்தேகமே. மறுவளமாக சனநாயகம் உலகின் வேறு எப்பகுதியிலாவது சிறிலங்காவில் உள்ளது போல கேலிக்கிடமாக்கப்படுவது உண்டா என்றும் கேள்வி எழுப்பலாம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை எந்தவித கேள்வியும் இன்றி சனாதிபதியால் கலைக்க முடியும் என்பது சிறிலங்காவில் மட்டுமே சாத்தியப்பாடானதாக இருக்க முடியும். சனாதிபதித் தரப்பு இதற்கு அரசியல் யாப்பில் இடமுள்ளது எனக் கூறிக் கொண்டாலும், இது சனநாயக விரோத, மக்கள் விரோதச் செயல் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கொள்ள எதுவுமில்லை.

ஏனெனில், மக்களால் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்வதற்கென்றே அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதற்கான உத்தரவாதத்தைக் கொடுத்தே மக்களிடம் இருந்து இந்த அங்கீகாரம் பெறப்படுகின்றது. இந்நிலையில் அரசியல் யாப்பில் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கலைப்பதென்பது அரசியல் யாப்பா? மக்களா? அதிகாரம் மிக்கவர்கள் என்ற கேள்வியைத் தவிர்க்க முடியாது எழவைக்கின்றது. அது மட்டுமல்லாமல், இறுதியாக மக்கள் அளித்த தீர்ப்பிற்கு எதிராக முன்னர் அவர்கள் கொடுத்த அங்கீகாரத்தைப் பயன்படுத்த முடியுமா? இறுதித் தேர்தலில் அதிகாரத்தைப் பயன்படுத்துபவர்களை மக்கள் நிராகரித்தனர் என்பதை எவராலும் நிராகரிக்க முடியுமா?

ஐ.தே. முன்னணி அரசாங்கம் மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றது எனக் குற்றம் சாட்டுவதனால், அதற்கு சனாதிபதித் தரப்பு கொண்டுள்ள அளவுகோல்தான் என்ன? விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது மக்கள் விரோதச் செயலா? யுத்தநிறுத்தம் செய்து கொண்டிருப்பது மக்கள் விரோதச் செயலா?

விடுதலைப்புலிகளுக்கு அதிக அளவு விட்டுக்கொடுப்புக்கள் செய்யப்பட்டுவிட்டன. விடுதலைப் புலிகளுக்குத் தமிழீழத்தை வழங்குவதற்கு ஐ.தே. முன்னணி அரசாங்கம் தயாராகி விட்டது எனக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாயின் அரசாங்கத்தைக் கலைத்தும் அந்நடவடிக்கைகளுக்கு எதிராக சனாதிபதி சந்திரிகா தரப்பு மேற்கொண்ட நடவடிக்கை தான் என்ன? பொதுத் தேர்தல் ஒன்று அதற்குத் தீர்வாகுமா?

உலகிலேயே ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கு எதிராக அந்த நாட்டின் ஊடகமே பிரச்சாரம் செய்வதென்பது சிறிலங்காவில்தான். இன்று சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்கள் அனைத்தும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. அதற்கென எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.

இது மாத்திரமல்ல, அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய முப்படைகள் மற்றும் பொலிஸ்படைகள் தற்பொழுது அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஏனெனில், முப்படைகளுக்கும், பொலிஸ் படைக்கும் கட்டளையிடும் அதிகாரத்தை கொண்டிருப்பவர் சனாதிபதியே ஆயினும், அவர் எதிர்க்கட்சியின் தலைவியே. அத்தோடு, முப்படைகளும் அரசாங்கத்திற்கு எதிரான தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கக் கூடியதொரு சூழ்நிலையும் அவதானிக்கத்தக்கதாகவே உள்ளது.

இதற்கு எடுத்துக் காட்டாக, யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் தேசவிரோதக் கும்பலான ஈ.பி.டி.பி.க்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுப்பதைச் சுட்டிக்காட்ட முடியும். இந்நிலையில், ஆயுதப் படைத் தரப்பு சனாதிபதி தரப்பிற்காகவும், அவர்கள் சார்ந்தவர்களுக்காகவும் தேர்தல் வன்முறைகளில் இருந்து மோசடிகள் வரையில் ஈடுபட வாய்ப்புண்டு.

இவற்றிற்கு அடுத்ததாக, சனாதிபதி சந்திரிகா அதிகாரத்தில் உள்ளாரா? அன்றி அவரது கட்சி அதிகாரத்தில் உள்ளதா? என்ற கேள்வியும் உண்டு. ஏனெனில், பாராளுமன்றம் கலைப்பின் பின் வெளியாகியுள்ள அறிவிப்பு ஒன்றின் பிரகாரம் அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களின் வாகனங்கள் 48 மணி நேரத்திற்குள் ஒப்படைக்கப்பட வேண்டும் என அறிவிப்பு வெளியாகியிருந்தது. இவ் அறிவிப்பு சனாதிபதி தரப்பினுடையதாக இருந்தாலும், இதனை வெளியிட்டவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரே ஆகும்.

அதாவது, தேர்தலுக்கு முன்பாகவே எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக நடந்து கொள்வதும், அரசாங்கம் – அதாவது தற்போதைய ஆளும் கட்சி – பார்வையாளர்கள் போன்றிருப்பதும் இலங்கையில் தான் சாத்தியப்படக் கூடியதொன்றாகும். ஆனால், இவை யாவற்றிற்கும் யாரை நொந்து கொள்வது? தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பை உருவாக்கிய சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவையா? அன்றி தற்பொழுது நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு தாண்டவம் ஆடும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையா?

எம்மைப் பொறுத்து இவர்கள் எவர் மீதும் குறைகூற நாம் விரும்பவில்லை. ஏனெனில், இவர்களில் எவருமே நாட்டின் நலன், மக்களின் நலன் என்ற ரீதியில் செயற்பட்டவர்கள் அல்ல. அதிகாரத்திற்கான போட்டி என்ற ரீதியில் மட்டுமே இவர்களின் அரசியல் நடவடிக்கை இருந்தது. அதிகாரத்திற்காக இவர்கள் சனநாயகத்தை மட்டுமல்ல, மக்களையே குழிதோண்டிப் புதைக்கத் தயாராக இருந்தார்கள். இந்நிலை சிங்கள அரசியற் தலைவர்கள் அனைவருக்குமே பொருந்தும். ஆகையினால், இன்று பிரதமர் ரணிலுக்காகவும் கவலைப்பட எதுவுமில்லை.

ஆனால், எம்மிடமுள்ள பிரதான கேள்வி சிறிலங்காவிற்குப் பாத்திரம் அறிந்து பிச்சை போடப்பட்டதா? என்பதே. அதாவது, சிறிலங்காவிற்கு ஓர் சனநாயக அரசியல் அமைப்பை அறிமுகம் செய்தது சரியானதா என்பதே ஆகும். ஏனெனில், சனநாயகப் பண்புகள், பாரம்பரியங்கள் அற்றதும் இனவாத சிந்தனை கொண்டதுமானதொரு கூட்டத்திடம் எவ்வாறு சனநாயக அமைப்பொன்றை ஒப்படைக்க முடியும். அவ்வாறு இல்லாவிடில் சனநாயகத்திற்கு இன்று இத்தகையதொரு அவலம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

# காபந்து அரசிடமுள்ள அமைச்சுக்கள் சிலவற்றைப் பறிக்க சனாதிபதி உத்தேசம்

### -சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ள காபந்து அரசாங்கத்திடம் இருந்து மேலும் சிலஅமைச்சுப் பொறுப்புக்கள் பறிக்கப்பட உள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

மின்னேரியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில; ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் அந்த அரசாங்கம் விடுதலைப்புலிகளின் தாளத்திற்கு ஆடியதால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது வாகனங்களை மீள ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாம் ஆட்சியமைப்பின் விவசாயிகளின் பிரச்சினைகளையே முதலில் தீர்ப்போம்

### –விமல் வீரவன்ச கூறுகின்றார்

எமது கூட்டணி ஆட்சிக்கு வந்ததும், முதலாவதாக விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கும் சட்ட மூலமே முதலாவது சமர்ப்பிக்கப்படும் என விமல்வீரவன்ச கூறியுள்ளார்.

4நாட்களாக தொடர்ந்த விவசாயிகளின் உண்ணா விரதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்வரசாங்கம் விவசாயிகளுக்கான உரத்தின் விலையை பலமடங்கு அதிகரித்தது. இதனால் சில விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். உலகச் சந்தையில் உரத்தின விலைக்கேற்ப இங்கு விலையை நிர்ணயிப்பது என்ற ஒப்பந்தம் ஒனறும் அனுரா வினால் விவசாயிகளின் சம்மேளனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நாட்டின் விவசாய மக்கள் உட்பட நாட்டையே கடும் அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற ஐதே. மு. மீண்டும் தலைதூக்க முடியாதவாறு எமது கூட்டணி செயற்படும் என அங்கு பேசிய அனுரா தெரிவித்துள்ளார்.

# 118 ஆசனங்களை தேர்தலில் பெறுவோம் ஐ.தே.க.வுக்கு 96 இடங்களே கிடைக்கும்!

### அனுரா. பண்டாரநாயக்க ஆருடம்

(கொழும்பு)

சனாதிபதி பாராளுமன்றைக் கலைத்த நாள் நல்லநாள் எனவும் ஐ.தே.முன்னணியை நிரந்தரமாகப் புதைத்துவிட்டதாவும் இனி இந்தநாட்டில் தமது யுகமே காணப்படும் என சனாதிபதியின் ஆலோசகர் அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட பொ.ஐ. மு. எம்.பி.ரஞ்சித்தின் எழுத்தாக்கம் ஒன்றை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். எமது கட்சிக்கு ஆட்சி அமைக்க 112 ஆசனங்கள் தேவைப்படும். ஆயினும் கூட்டணியமைத்தால் எமக்கு 118 ஆசனங்கள் கிடைக்கும். இம்முறை 06 மேலதிக ஆசனங்களைப் பெறுவோம். ஐ.தே.க.வுக்கு 96 இடங்களே கிடைக்கும் என்றார்.

ரணில்விக்கிரமசிங்க தனது பால்ய நண்பன் என்றாலும் தனிப்பட்ட முறையில் நல்லவர் என்றாலும் தலைமைப் பொறுப்பில் அவர் தவறிழைத்துவிட்டார். அவரிடம் தூரநோக்கம் கிடையாது, கொள்கை கிடையாது என அவர் மேலும் கூறினார்.

# சிறிலங்காவின் பங்குச் சந்தை எப்போதும் இல்லாதவகையில் வீழ்ச்சி!

(கொழும்பு)

சிறிலங்காவின் பங்குச் சந்தை முன்னர் எப்போதும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தை கலைத்ததன் விளைவே இதுவென்றும், இந்த வீழ்ச்சியானது சிறிலங்காவின் பங்கு சந்தையின் வரலாற்றில் இரண்டாவது வீழ்ச்சி எனவும் பொருளாதாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாதுகாப்புக் குறித்தே கவலைப்படுகிறோம்

### இந்திய அணித்தலைவர். கங்குலி

பாகிஸ்தானில் இந்தியக் கிரிக்கெட் அணியின் பாதுகாப்புக் குறித்து இந்திய அணித்தலைவர் கங்குலி கவலை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சுற்றுலா குறித்து நாம் கவலைகொள்ளவில்லை. அங்குள்ள பாதுகாப்புக் குறித்துத் தான் நாம் கவலை கொண்டுள்ளோம் என்றும், இங்கு(இந்தியாவில்) எமது குடும்பங்கள் உள்ளதால் அங்குள்ள நிலைமை குறித்து நாம் கவலை கொள்கின்றோம். விடயம் இலகுவாக இருக்கப் போவதில்லை: இதுகுறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் விரிவாக கலந்துரையாட இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

என்றாலும், சுற்றுலாவில் பங்குபற்றாமல் ஒதுங்குவது என்ற எந்த முடிவையும் அணி எடுக்கவில்லை. இந்திய வீரர்கள் இந்தச்சுற்றுலாவில் பங்குபற்ற மாட்டார்கள் எனச் சில செய்திகள் வெளியானமை குறித்து நான் கேள்விப்பட்டுள்ளேன். அவை தவறானவையாகும். எங்களின் ஒரே கவலை பாதுகாப்பு பற்றியதே. இதற்கு மேல் இவ் விடயத்தில் இப்போது கருத்துத் தெரிவிப்பது நீதியானதல்ல என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலிய முக்கோணத் தொடர் குறித்து கருத்து தெரிவித்த கங்குலி, இரண்டரை மாதகாலமாக ஒரேமாதிரி யார் தொடர்ந்து சிறப்பாக விளையாடுவது என்பது சிரமமானதாகும். நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பின்னர் நீண்டதொரு முக்கோணத் தொடரில் விளையாடுவது என்பது கடினமானதாகும். முக்கோண ஒருநாள் போட்டித் தொடரின் லீக் போட்டிகளைக் குறைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இரண்டு இறுதிப் போட்டிகளிலும் நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை. எனவே கிண்ணத்தை வெல்லும் தகுதி எங்களுக்கு இல்லை. கடந்த ஒருவாரகாலமாகவே எங்களுடைய விளையாட்டில் சரிவு ஏற்பட்டுவிட்டது. இதற்காக நாங்கள் சோர்ந்து விட்டோம் என்று அர்த்தமில்லை. தோல்விக்கு இதை ஒரு காரணமாகவும் நான் கூற விரும்பவில்லை. இதேமாதிரியான தொடரில் அவுஸ் அணி இந்தியாவில் விளையாடினாலும் இதே நிலைதான் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். இருப்பினும் இந்தத் தொடரானது மிகச்சிறந்த தொடராக எங்களுக்கு இருந்தது. இளம் வீரர்களை வைத்துக் கொண்டு உலகின் தலைசிறந்த அணிக்குஎதிராகசிறப்பாக விளையாடியது என்பது மிகப் பெரிய விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மைக்கல் பெவன் இணைப்பு

சிறிலங்காவுக்கான சுற்றுலா மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலியா தனது அணியில் மைக்கல் பெவனையும் இணைத்துள்ளது. இவரின் வருகை தமது அணிக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் விக்கட்காப்பாளர் கில் கிறிஸ்ட்டின் பணிக்கு உதவியாக இருக்கும் எனவும் அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்துள்ளார். இரு அணிகளுக்குமிடையேயான முதலாவது ஒரு நாள் போட்டி வரும் 20ஆம் திகதி நடைபெறும்.



# காவல் பணிமனை அருகில் குண்டுவெடிப்பு ஈராக்கில் 35 பேர் பலி; 70 பேருக்குக் காயம்

(பாக்தாத்)

பாக்தாத்திற்கு தெற்கே ஸ்தான் தரியா நகரில் காவல் நிலையத்திற்குவெளியே நேற்றுகார்க் குண்டு வெடித்ததில் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன் 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

காவல்துறைப் பணிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அங்கு பலர் காத்து நின்றவேளை, இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, குண்டுத் தாக்குதல் நடைபெற்ற காவல் நிலையத்தைச் சுற்றி எவரும் போக இயலாதவாறு அமெரிக்கப்படையினர் தடுப்பு அரண்களை அமைத்துள்ளனர்.

அத்துடன் அமெரிக்க எதிர்ப்பு கோஷங்களைக் கூறியவாறு படைமுகாமை நோக்கி முன்னேற முற்படும் மக்களை பின்னோக்கி நகரச் செய்யும் பணியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கப் படைகளுடன் இணைந்து செயலாற்றி வருகின்ற ஈராக்கிய காவல்துறையினரை குறிவைத்து நடத்தப்படும் குண்டுத் தாக்குதல்களின் தொடர்ச்சியாக இக்குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஈரானிய விமானம் சார்ஜாவில் வீழ்ந்து நொருங்கியதில் 43பேர் பலி

சார்ஜா விமான நிலையத்திற்கருகே ஈரானிய விமானம் நேற்று வீழ்ந்து நொருங்கியதில் 43 பேர் உயிரிழந்துள்ளனர். விமானம் தரையிறங்க முயன்ற வேளையே வீழ்ந்து நொருங்கியுள்ளது.

## திலங்க சுமதிபாலவின் வழக்கு தொடர்பாக

# சிறைச்சாலை ஆணையாளரை நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

(கொழும்பு)

திலங்க சுமதிபாலவின் வழக்குத் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் றோமிமகூக் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சுமதிபால விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமென கடந்த இரண்டாம் திகதி நீதிமன்றம் உத்தரவிட்டபோது அவ் உத்தரவு உரிய முறையில் செயற்படுத்தப்படாது அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணம் செலுத்தி சிகிச்சை பெறும் அறையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என பிரதிப்பொலிஸ்மா அதிபர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். ஒன்று சாதாரணகைதி ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டால் அவர் சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்படவேண்டும். இரண்டாவது அவருக்கு சிறைச்சாலை இலக்கம் வழங்கப்படவேண்டும். மூன்றாவது நோயாளியாக இருந்தால் அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். போன்ற நடைமுறைகளை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து இது சம்பந்தமாக விளக்கமளிப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளரை நாளை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை நேற்று நீதிமன்றத்துக்கு நோயாளியான திலங்க சுமதிபால அம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு வரப்பட்டார். இவரை மேலும் 15 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (32)

# கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் 3ஆம் ஆண்டு நிறைவுவிழா




(அலுவலக செய்தியாளர்)

கிளி- பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா நேற்று கிளி. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா ஏற்றி வைத்தார். மங்கல விளக்கேற்றப்பட்டதை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் பயிற்சி பெற்று தாதிகளாக தரமுயர்த்தப்பட்ட தாதியர் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அடுத்து பயிலுனர் தாதியர் நிலையத்திலிருந்து தாதியர் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட தாதிகளுக்கு தாதியர் சீருடை வழங்கப்பட்டது. இதனை மருத்துவ கலாநிதி கெங்காதரன், மருத்துவர் ஜெகராஜா, மருத்துவர் யூடிரமேஸ் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். சித்தி பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சான்றிதழ்களை மருத்துவமனை மருத்துவர் மனோஜ் வழங்கினார்.

மேற்படி நிகழ்வில் சிறப்புரையினை மருத்துவக் கலாநிதி கெங்காதரன், யூடி ரமேஸ்,கண்ணன் மருத்துவமனை மருத்துவர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# அரச சொத்துக்களை தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கென அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் தேர்தல் ஆணையாளரைத்தவிர வேறு எவரும் அரசிற்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோமெனவும் கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வாகனங்கள் மட்டுமன்றி அரசிற்குச் சொந்தமான கட்டடங்கள், மேடைகள், மேடை உபகரணங்கள், ஒலி, ஒளி உபகரணங்கள் உட்பட அனைத்துப் பொருட்களையும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாதெனவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டத்தை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதுதொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை சனாதிபதி செயலகம் தயாரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## புனரமைப்பு

முல்லைத்தீவு அரச அதிபருக்கான விடுதி வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை இவ்விடுதி வன்னிப் புனர்வாழ்விற்கு துணைபுரியும் அமைச்சின் முல்லைத்தீவு மேற்பார்வையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (20)

# சிறப்பாக இடம்பெற்ற வவு. மாவட்ட தே. எ. பேரவைகளின் சங்கம நிகழ்வு

(வவுனியா)

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைகளின் சங்கம நிகழ்வு நேற்று மாலை 3.00 மணிக்கு குலதேவராஜா மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சிப் பேரவைகளின் செயலாளர் நாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பொதுச் சுடரினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை வவுனியா நகர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் தேசிய எழுச்சிப் பேரவையின் கடமைகள் தொடர்பாகவும், அவை ஆற்ற வேண்டிய பங்களிப்புக்கள் தொடர்பாகவும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் உரை நிகழ்த்தினார். (21)

# குன்றும் குழியுமாகக் காணப்படும் முல்லைத்தீவு பசார் வீதி

முல்லைத்தீவு வீதியில் இதுவரை ஒரு சிலதே கிரவலினால் புனரமைக்கப்பட்டுள்ளது. ஆனால் முல்லைத்தீவு பசார் வீதி திருத்துவதற்கான எந்த முயற்சியும் இதுவரை எடுக்க வில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பிரதானமாக பேருந்து தரிப்பிடத்திற்கு திரும்பும் இடத்தில் அமைந்துள்ள ஆலமரம் வளர்ந்து விழுதுகளும், கிளைகளும் வீதியில் பதிந்ததால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. (20)

### நாட்டைப்...

சுமத்தும் தேர்தலுக்குச் செல்லாமல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத்தைக் கலைத்தபின்னர் பொதுசன ஐக்கிய முன்னணியிலிருந்து இரண்டு அமைச்சர்களை சனாதிபதி நியமித்தமை சனநாயக விரோதச் செயலாகும்.

போர்நிறுத்தத்தை கடைப்பிடிக்கவும், சமாதானத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கும் சனாதிபதியின் அதிகாரங்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கு தேவைப்படவில்லை.

புலிகள் இடைக்கால நிர்வாக யோசனையை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை சனநாயகத்திற்கு எதிரான செயலாகும். அதிலும் சனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்களின் மூன்றிற்கும் வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் குறைப்பை ஏற்படுத்த நாடாளுமன்றத்திற்கு உரிமை உண்டு. எனினும் அவ்வாறு எந்தவோர் நடவடிக்கையையும் மேற்கொள்ளாது இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் கருத்திற்கமைய பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் அதற்கு மாறாக சனாதிபதி பொதுத் தேர்தலை நோக்கிச் சென்றமை மக்களின் தீர்ப்பிற்கு எதிரான செயலாகுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### கண்காணிப்புக்..

இதில்பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை, படையினர்-புலிகளிற்கிடையில் புரிந்துணர்வை வலுப்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. படைத்தரப்புடன் நீண்ட நட்களாக இடம் பெறாதிருக்கும் புரிந்துணர்வுச் சந்திப்பை மீண்டும் ஏற்படுத்த இச்சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொண்ட் புரு ஹேலங்டே நேற்று விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி கேணல் கருணாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

போர்நிறுத்த உடன்பாடும், சமாதானமும் தடையின்றி முன்னெடுக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு தனது இவ் விஜயம் அமைந்ததாக தெரிவித்துள்ளார். அத்துடன் தென்னிலங்கையில் அரசியல் முறுகல்கள் நிலவுகின்ற போதிலும் போர்நிறுத்த உடன்பாடு உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கரடியனாறு தேனகம் விடுதியில் இச் சந்திப்பு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.(32)

### சமாதானத்தை..

விடுத்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டது சமாதானத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சமாதானத்தை முன்னெடுக்கக் கூடிய அரசாங்கத்தை ஏற்படுத்த தென்னிலங்கை மக்கள் முன்வர வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் போர் நிறுத்தச் சூழலில் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தல் ஒன்று வரும் என்பது தாம் எதிர்பார்த்த ஒன்று. இத் தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும். அதற்கான பூரண ஒத்துழைப்பை நாம் வழங்குவோம்.

இந்தத் தேர்தலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்த வகையிலும் நாங்கள் சம்பந்தப்படப்போவதில்லை எனக் கூறிய தளபதி கருணா,

நாம் ஆட்சிக்கு வந்தால் மூன்றாம் தரப்பில்லாத சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கப் போவதாக ஜே.வி.பி. கூறியமை தொடர்பாக செய்தியாளர்கள் அவரிடம் வினவிய போது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு அனுசரணை இல்லாத எந்தவோர் பேச்சுவார்த்தையும் சாத்தியமில்லாதவையென கூறியுள்ளார். (32)

### தென்பகுதி..

என்றும் போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஹொலண்ட் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### இரு..

(வயது 19)ஆகியஇருவருமே தாக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாயில் இருந்து கண்டி வீதியூடாகசொடிகாமம்நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இவர்களது மோட்டார் சைக்கிள்களை சாவகச்சேரி நகரப்பகுதியில் வைத்து படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். ஆயினும் தாம் மறித்த இடத்தில் அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தாததையடுத்தே படையினர் மோசமாகத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரான அ.பார்த்திபன். தலை மற்றும் கைகளில் மோசமான காயங்களுக்குள்ளாகியுள்ளார். (27)

### தேர்தல்..

றவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை அனைத்து கட்சிகளும் முன்னோக்கி நகர்த்திச் செல்ல வேண்டும். என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (32)

### சனாதிபதி..

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை தான் கொண்டிருந்த போதிலும் நல்லிணக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆட்சி அமைக்குமாறு பலமுறை ஐக்கிய தேசிய முன்னணியைதான் கேட்டதாகவும் அதனை ஏற்க ஐக்கிய தேசியக்கட்சி தவறி விட்டதையும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

### சனாதிபதியின்..

குவதைத் தடுப்பதற்காகத்தான், சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார் என்று கூறியுள்ளார். இப்படிப்பட்டவர்களின் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாது. ஆனால் சிலவேளை தமிழீழம் வரலாம் என்று நான் நினைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.